**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஆத்தூர்.**

முன்னிலை : **திருமதி. D.ஜான்சிராணி, MBA., LLM.,**

**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி**

**ஆத்தூர்.**

2026–ஆம் ஆண்டு, பிப்ரவரி திங்கள், 23–ஆம் நாள், திங்கட்கிழமை

**இ.ம.எண்.18/2026 இன் அ.வ.எண். 194/2004**

**CNR No. TNSA13-000025- 2004**

1. செல்லம்மாள் (இறந்தவர்)
2. இளையப்பன் . . . மனுதாரர்கள்/1, 2 வாதிகள்

/எதிராக/

1. செங்கோடன் . . . எதிர்மனுதாரர்/3 ம் வாதி
2. கைலப்ப கவுண்டர் (இறந்தவர்)
3. நல்லம்மாள் (இறந்தவர்)
4. குப்புசாமி (இறந்தவர்)
5. நடேசன்
6. சரோஜா
7. மணி (எ) பெருமாயி
8. தங்கம் (எ) பார்வதி
9. சரோஜா (இறந்தவர்)
10. P.கலைச்செல்வி
11. K.பழனிவேல்
12. S.வேல்முருகன்
13. A.நீலாவதி . . . எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனுவின் மீதான விசாரணையானது, 23.02.2026–ஆம் தேதியில் இந்நீதிமன்றத்தின் முன்பு இறுதியாக வந்தபொழுது, மனுதாரர்கள்/1, 2 வாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.R.ராம்சுந்தர் அவர்கள் ஆஜராகியும், 1ம் எதிர்மனுதாரர்/3ம் வாதி தரப்பில் திரு.L.தயாளன் அவர்கள் ஆஜராகியும், 5, 6 எதிர்மனுதாரர்கள் தரப்பில் திரு.K.சந்திரசேகரன் அவர்கள் ஆஜராகியும், 10, 11 எதிர்மனுதாரர்கள் தரப்பில் திரு.S.ரவிச்சந்திரன் அவர்கள் ஆஜராகியும், 7, 8, 12, 13

எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தோன்றாதரப்பினர்களாக கருதப்பட்டும், இருதரப்பு வாதம் மற்றும் ஆவணங்கள் பரிசீலனை செய்து இதுநாள் வரையில் இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்த இம்மனுவில், இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்

**உத்தரவு**

மனுதாரர்/2ம் வாதி இம்மனுவுடன் காலதாமதமாக தாக்கல் செய்யும் ஆவணங்களை ஏற்று குறியீடு செய்ய வேண்டி உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 7 விதி 14(3) மற்றும் பிரிவு 151ன் கீழ் இம்மனுவை தாக்கல் செய்துள்ளார்.

2. **மனுதாரர்/2ம் வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவின் சுருக்கம் :**

மனுதாரர் மேற்படி வழக்கில் 2ம் வாதி என்றும், தாவாவில் வாதி தரப்பு சாட்சியமான Pw1 சாட்சியமானது முடிக்கப்பட்டது என்றும், இந்நிலையில் 3ம் வாதியும், 1ம் எதிர்மனுதாரருமான மனுதாரரின் சகோதரர் அவரது தரப்பில் தனியாக வழக்கறிஞர் வைத்து Pw2 சாட்சியம் அளித்துள்ளதாகவும், 2003ம் ஆண்டிலேயே அவர் தாவா சொத்தின் மீது தனக்குள்ள உரிமையை விட்டுகொடுத்து சம்மதப்பத்திரம் ஏற்படுத்திக் கொடுத்துள்ளதாகவும், மேற்படி ஆவணங்களை உரிய காலத்தில் தனது தரப்பு ஆவணங்களாக தாக்கல் செய்ய இயலவில்லை என்றும், தற்பொழுது மேற்படி சம்மதப்பத்திரத்தையும், 2003ம் ஆண்டின் பாகப்பிரிவினையை பொறுத்து ஏற்பட்ட பட்டாக்களையும் தனது தரப்பு சான்றாவணமாக தாக்கல் செய்வதாகவும், காலம் கடந்து தாக்கல் செய்யும் மேற்படி ஆவணங்களை தனது தரப்பு சான்றாவணங்களாக குறியீடு செய்வது அவசியம் என்றும், எனவே காலதாமதமாக தாக்கல் செய்யும் ஆவணங்களை மன்னித்து ஏற்க வேண்டி இம்மனுவை தாக்கல் செய்துள்ளார்.

3. **1ம் எதிர்மனுதாரர்/3ம் வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரையின் சுருக்கம்:**

1ம் எதிர்மனுதாரர்/3ம் வாதி இம்மனுவில் குறிப்பிட்டுள்ள சங்கதிகளை

மறுத்தும், இந்த வழக்கானது மனுதாரர்கள் மற்றும் இந்த எதிர்மனுதாரரால் பிரதிவாதிகளுக்கு எதிராக பாகம் மற்றும் தனி சுவாதீனம் கோரி வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும், மனுதாரர்/2ம் வாதி 12.05.2003 தேதியிட்ட பதிவு செய்யப்படாத ஒப்புதல் பத்திரத்தை தாக்கல் செய்துள்ளதாகவும், ஆனால் அ.வ.எண். 194/2004 வழக்கானது வாதிகளால் 05.07.1994 அன்று தாக்கல் செய்யப்பட்டது என்றும், எனவே 12.05.2003 தேதியிட்ட ஒப்புதல் பத்திரம் வழக்கிற்கு முன்பு ஏற்படுத்தப்பட்டது என்றும், மனுதாரர்/2ம் வாதி மற்றும் அவரது தாயார்/1ம் வாதி மற்றும் அவரது சகோதரர்/3ம் வாதி ஆகியோர் கூட்டாக மேற்படி வழக்கைத் தாக்கல் செய்ததாகவும், எனவே 12.05.2003 தேதியிட்ட ஒப்புதல் பத்திரம் ஒரு தவறான, ஜோடிக்கப்பட்ட ஆவணம் என்றும், மனுதாரர்/2ம் வாதியால் சமர்ப்பிக்கப்பட்ட மற்றொரு ஆவணம் வழக்கு சொத்துக்களுக்கு அவசியமற்றவை என்றும், பதிலுரை தாக்கல் செய்துள்ளார்.

4. **10ம் எதிர்மனுதாரர்/9ம் பிரதிவாதி தாக்கல் செய்து 11ம் எதிர்மனுதாரர்/10ம் பிரதிவாதி ஏற்றுக்கொண்டுள்ள எதிருரையின் சுருக்கம்:**

10, 11 எதிர்மனுதாரர்கள் குறிப்பாக ஒப்புக்கொள்ளும் சங்கதிகளை தவிர மற்றவற்றை மனுதாரரே நிரூபிக்க வேண்டும் என்றும், மனுதாரர்/2ம் வாதி 2 முதல் 13 வரையிலான எதிர்மனுதாரர்கள் மீது பாகப்பிரிவினை மற்றும் தனித்த சுவாதீனம் மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளதாகவும், 1ம் எதிர்மனுதாரர்/3ம் வாதிக்கு இவ்வழக்கில் எவ்வித உரிமையும் இல்லை என்பது போல் குறிப்பிட்டு அதற்கான ஆவணத்தை தாக்கல் செய்யப்போவதாக குறிப்பிட்டுள்ளது முற்றிலும் தவறானது என்றும், அந்த ஆவணத்தை நிரூபிக்கும் சுமை மனுதாரரிடம் உள்ளது என்றும், இம்மனு வேண்டுமென்றே காலதாமதத்தை ஏற்படுத்தும் நோக்கத்துடன் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், எனவே இம்மனுவை செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என எதிருரை தாக்கல் செய்துள்ளார்கள்.

5. 5, 6 எதிர்மனுதாரர்கள் /பிரதிவாதிகள் இம்மனுவை அனுமதிப்பதில் ஆட்சேபனை இல்லை என குறிப்புரை செய்துள்ளனர்.

6. தற்பொழுது இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில், மனுதாரர்2ம் வாதி இம்மனுவில் கோரிய பரிகாரம் அவருக்கு கிடைக்கத்தக்கதா? என்பதேயாகும்.

7. மனுதாரர்கள்/எதிர்மனுதாரர்கள் தரப்பு வாதம் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது.

மனுதாரர்/2ம் வாதி இம்மனுவை தனது தரப்பு கூடுதல் ஆவணமான 1 முதல் 3 வாதிகளுக்கு இடையே ஏற்படுத்திக் கொண்ட 12.05.2003 தேதியிட்ட சம்மத பத்திரம் மற்றும் 3ம் வாதி பெயரிலுள்ள பட்டா ஆகிய ஆவணங்களை தங்கள் தரப்பு கூடுதல் ஆவணங்களை தாக்கல் செய்ய அனுமதி கோரி இம்மனுவை தாக்கல் செய்துள்ளார்.

1ம் எதிர்மனுதாரர்/3ம் வாதி தரப்பில் மனுதாரர்கள் தங்கள் தரப்பில் தாக்கல் செய்யப்படும் ஆவணங்களை சமர்ப்பிக்காமல் இம்மனுவை தாக்கல் செய்துள்ளதாவும், இம்மனு தாக்கல் செய்யப்படும் போது மனுவில் கண்ட ஆவணம் பற்றி குறிப்பிடவில்லை எனவும், எனவே மனுவில் குறிப்பிட்டுள்ள ஆவணங்களை வழக்கிற்காக தயார் செய்யப்பட்டவை என்றும், எனவே மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என கோரி பதிலுரை தாக்கல் செய்துள்ளார்.

10, 11 எதிர்மனுதாரர்கள் /பிரதிவாதிகள் தரப்பில் மனுவில் குறிப்பிட்டுள்ள காரணங்களை பொய்யான காரணங்கள் என்றும், 1ம் எதிர்மனுதாரர்/3ம் வாதிக்கு இவ்வழக்கில் எவ்வித உரிமையும் இல்லை என்பது போல் குறிப்பிட்டு அதற்கான ஆவணத்தை தாக்கல் செய்ய போவதாக குறிப்பிட்டுள்ளது முற்றிலும் தவறானது என்றும், அந்த ஆவணத்தை நிரூபிக்கும் சுமை மனுதாரரிடம் உள்ளது என்றும், இம்மனு வேண்டுமென்றே காலதாமதத்தை ஏற்படுத்தும் உள்நோக்கத்துடன் தாக்கல் செய்துள்ளதாகவும் எதிருரை தாக்கல் செய்துள்ளார்.

இந்நிலையில் மனுதாரர்கள்/வாதிகள் மற்றும் 1ம் எதிர்மனுதாரர்/3ம் வாதி ஆகியோர் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு எதிராக பாகம் மற்றும் தனித்த சுவாதீனம் மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ள நிலையில் 3ம் வாதி தனது பாகத்தை விட்டுகொடுத்து விட்டதாக கூறி ஏற்படுத்தப்பட்ட ஆவணத்தை மனுதாரர்/2ம் வாதி தரப்பில் தாக்கல் செய்ய வேண்டி கோரியுள்ளதால், இவ்வழக்கில் முழுமையான தீர்வு காண 2ம் வாதி தரப்பில் தாக்கல் செய்யப்படும் ஆவணத்தை பரிசீலனை செய்வது அவசியம் என்றும், எனவே மனுவில் கூறப்பட்டுள்ள ஆவணத்தை 2ம் வாதி தரப்பில் தனது ஆவணங்களாக தாக்கல் செய்ய அனுமதிப்பதே நீதியின் நலனுக்கு உகந்தது என்றும், இந்நீதிமன்றம் கருதுகிறது. மேலும் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் மேற்படி ஆவணங்களை பற்றி குறுக்கு விசாரணை செய்து கொள்ள முழு உரிமை உள்ளதால் இம்மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.

8. **<u>தீர்வு :</u>**

இறுதியாக இம்மனுவானது அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இவ்வுத்தரவானது என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு, அவரால் வரிவடிவில் எடுக்கப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்க்கப்பட்டு, பிழை திருத்தம் செய்யப்பட்டு, இன்று 2026–ஆம் ஆண்டு, பிப்ரவரி திங்கள், 23–ம் நாள், திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

D JANSIRANI

Digitally signed by D JANSIRANI
Date: 2026.02.23 18:45:04 +0530

**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி**
**ஆத்தூர்.**

<u>1. மனுதாரர்/2 ம் வாதி தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்:</u>

இல்லை

<u>2. எதிர்மனுதாரர்/3 ம் வாதி தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்:</u>

இல்லை

<u>3. எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்:</u>

இல்லை

D JANSIRANI

Digitally signed by D JANSIRANI
Date: 2026.02.23 18:45:20 +0530

**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி**
**ஆத்தூர்.**

**<u>கூ.மா.உ.நீ. ஆத்தூர்</u>**
அசல்/வரைவு/உத்தரவு
இ.ம.எண். 18/2026 இன்
அ.வ. எண்.194/2004
நாள் : 23.02.2026